# ஒரு அறிமுகம்

## [2 கொரிந்தியர்]

*"... ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குரியவனென்று நம்பினால், ... நாங்களும் கிறிஸ்துவுக்குரியவர்களென்று அவன் தன்னிலேதானே சிந்திக்கக்கடவன்" (10:7).*

நன்கு அறியப்பட்ட ஒரு ஊழியக்காரர், கப்பல்கள் அடிக்கடி சேதமடையும் அபாயகரமான கடற்கரையொன்றில் நிலைநாட்டப்பட்டிருந்த உயிர்காக்கும் நிலையம் பற்றிய ஒரு உவமையைக் கூறியுள்ளார். அதிலிருந்த தன்னார்வத் தொண்டர்கள், மனிதர்கள் மூழ்கிப்போவதிலிருந்து காப்பாற்றுகையில், தங்கள் உயிரைத் திரும்பத் திரும்பப் பணயம் வைத்தனர். அந்த உயிர்காக்கும் நிலையம் வளருகையில், அதன் உறுப்பினர்கள், படகுகளுக்கும் கடலில் இருந்து தாங்கள் காப்பாற்றியவர்களுக்கும் குடில்களை எழுப்பினர். பின்பு அவர்கள், கப்பற்சேதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வசதியாகத் தங்குவதற்கு ஒரு கட்டிடத்தைக் கட்டியெழுப்பினர். உறுப்பினர்கள், கட்டிடத்தில், சிறப்பாக அதில் ஒரு உணவகம், விளையாட்டு அறைகள் மற்றும் தங்களுக்கென்று ஒரு ஓய்வு அறை ஆகியவற்றைச் சேர்த்தபின்பு பெரிதும் சந்தோஷமடைந்தனர். பின்பு அந்த நிலையம் தனது பெருமையில் வளர்ந்தது மற்றும் அதிக செல்வாக்குள்ள உறுப்பினர்கள் அவர்களுடன் சேர்ந்தனர். சற்றுக்காலத்திற்குப் பின்பு, அதன் உறுப்பினர்கள் கேளிக்கையில் மகிழ்ச்சியாய் ஈடுபட்டிருக்கையில் தங்கள் வேலையாகிய உயிர்காக்கும் பணியைச் செய்ய வேலையாட்களைக் கூலிக்கு அமர்த்தினர்.

இந்த வளர்ச்சியானது, அந்த நிலையத்தின் தோற்றகால நோக்கம் இழந்துபோகப்பட்டது என்று முடிவுசெய்யும் அளவுக்கு, உயிர்காக்கும் நிலையத்தின் சில உறுப்பினர்களைத் தொந்தரவு செய்தது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் வேலையை இராஜிநாமா செய்துவிட்டு அதேகடற்கரையில் தொலைவில் ஒரு உயிர்காப்பு நிலையத்தைத் தொடங்கினர். ஆண்டுகள் கடந்தபோது, புதிய நிலையமும், அதிலிருந்து ஒரு குழுவானது புறம்பே சென்று தங்கள் புதிய நிலையத்தைத் தொடங்கும் வரையில், தொடக்கத்தில் இருந்த நிலையத்தின் அதே மேம்பாடுகளைப் பெற்றிருந்தது. இன்றைக்கு நீங்கள் அந்தக் கடற்கரையைச் சென்று பார்ப்பீர்கள் என்றால், கரையோரத்தில் தொடர்ச்சியாகப் பல தனிப்பட்ட குழுக்களைக் காண்பீர்கள். இருப்பினும் அவற்றில் ஒன்றுகூட, அந்தத் தண்ணீரில் இன்னும் அதிகமான கப்பற்சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தாலும், உயிரைக் காப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருப்பதில்லை.

இந்தக் கதையின் அர்த்தத்தைக் கண்டறிதல் கடினமாயிருப்பதில்லை. நிறுவனங்கள், வலிவு மற்றும் பலம் ஆகியவற்றின் அடையாளங்களைக் காண்பிக்கையிலேயே, அவை தங்களின் தொடக்ககால நோக்கத்தைச் சுலபமாக இழந்துபோகின்றன. சபையின் வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றில் கூட இந்தச்

செயல்முறை நடக்கிறது. இன்றைய நாட்களில் உள்ளூர் சபைக்குழுமங்களில், நிகழ்வுகள் அசாதாரணமாகப் பல்வகைத் தன்மையுடன் உள்ளன. வாழ்வின் மாற்று மாதிரிகள் பலவற்றை நாம் உற்றுக்கவனிக்கும்போது, குறிப்பிட்ட சில முக்கியமான கேள்விகள் கேட்கப்பட வேண்டும்: அந்த மாற்று மாதிரிகள் யாவும் சபையின் நோக்கத்திற்கு சமமாக அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றனவா? எந்த நிகழ்வுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்று தீர்மானிப்பதில் நாம் பயன்படுத்தக்கூடிய தர அளவைகள் யாவை? உயிர்காப்பு நிலையத்தைப் போலவே சபையும் தனது தொடக்ககால நோக்கத்தில் இருந்து தொலைவில் விலகிச்சென்று இருந்துவிட முடியுமா?

மதநிறுவனங்கள் நேர்மையற்றவைகள் என்பதே கிறிஸ்துவத்தைப் பற்றித் தொலைத்தொடர்பு ஊடகம், தனது வழக்கமாகச் சித்தரிப்பில் தெரிவிக்கும் கருத்தாக உள்ளது. ஊழியக்காரர் என்பவர் பொதுவாக மாய்மாலக்காரர் என்றும் தனக்கே ஊழியம் செய்துகொள்பவர் என்றும் சித்தரிக்கப்படுகிறார். சின்கிளேயர் லூயிஸ் எல்மர் கேன்ட்ரீ என்பவர், தன்னை வளப்படுத்திக்கொள்வதற்கும் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்கும் மதத்தைப் பயன்படுத்திக்கொண்ட ஒரு வியாபாரியாக இருந்தார். மதரீதியான மக்களும் நிறுவனங்களும், தங்களையே வளப்படுத்திக்கொள்ளும் முகவர்களே தவிர வேறல்ல என்று சுட்டிக்காண்பிக்கும் கதைகளில் ஊடகமானது அடிக்கடி மகிழ்வுகொள்வதாகத் தோன்றுகிறது. டஸ்டோவ்ஸ்கீ என்பவர், மாபெரும் தரமிக்க இலக்கியம் ஒன்றில், நிறுவனமயமான மதத்தின் நம்பகத்தன்மை பற்றி வரிசையாக சந்தேகங்கள் எழுப்பப்பட்ட ஒரு கதையைக் கூறினார். Grand Inquisitor (*கராமசோவ் சகோதரர்கள்*) என்ற கதையில், ஸ்பெயினைச் சேர்ந்த ஒரு சிறு நகருக்கு இயேசு கிறிஸ்து திரும்பி வருகிறார். விரைவில் அவர், நிறுவன மாக்கப்பட்டிருந்த மதத்தினால் சிறையில் அடைக்கப்பட்டு, அவர்களின் இயக்கத்தில் தலையிட அவருக்கு உரிமை எதுவும் இல்லை என்று கூறப்படுகிறார். கடைசியில் இயேசுவினிடம், “போ, இனி இங்கு வராதே. வரவே வராதே - ஒருக்காலும், ஒருக்காலும் வராதே!” என்று கூறப்படுகிறது. கிறிஸ்தவம் தனது உண்மைநிலையை இழந்துபோகக்கூடும் என்பதே எழுத்தாளரின் கருத்தாக இருந்தது.

கிறிஸ்தவத்தின் உண்மைத்தன்மை பற்றிக் கேள்வி கேட்கின்றவர்கள், தங்களைத் தாங்களே, கிறிஸ்தவத்தின் உண்மைத்தன்மை பற்றிக் கேள்விகேட்பதில் காண்பிக்கும் ஆர்வத்தை, கிறிஸ்தவர்கள் உண்மை யான கிறிஸ்தவ உபதேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்களா என்று கேட்பதில் காண்பிப்பதில்லை. எல்மர் கேன்ட்ரியில் உள்ளது போல, கிறிஸ்தவ நடத்துனர்கள் வியாபாரிகளாக உள்ளனர், சபைகள் தங்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் விரிவாக்குதல் தவிர வேறு எதிலும் ஆர்வம் கொண்டிருப்ப தில்லை என்பதே பொதுவான விமர்சனமாக உள்ளது. கிறிஸ்தவர்கள், உலகத் தில் எஞ்சியுள்ள மற்றவர்களில் இருந்து மாறுபட்டிருத்தல் பற்றி உயர்வான உரிமைகோருதல்களைத் தரலாம் என்றிருக்கையில், அவர்கள் இயேசு கிறிஸ்துவின் தர அளவைக்கு மேலாக உலகத் தர அளவைகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதால் விமர்சிக்கப்படுகின்றனர்.

நாம், சபைகள் மற்றும் ஊழியக்காரர்கள் பற்றிய பொதுவான சித்தரிப்புகள் பற்றி முதலில் கவலைப்படாது இருக்கக்கூடும், ஏனெனில் நாம், இந்த

*“நம்பகத்தன்மையின் இடைவெளி” வேறொருவருடைய பிரச்சனை என்று முடிவு செய்யக்கூடும். மேலும் நாம், கிறிஸ்துவ நடத்துனர்களை சந்தர்ப்பவாதிகள் என்று சித்தரிக்க விரும்புபவர்கள், தங்கள் மதிப்பீட்டில் தப்பெண்ணம் உடையவர்களாக இருக்கின்றனர் என்றும் முடிவுசெய்யக்கூடும். ஆனால் நம்பகத்தன்மையின் சோதனையைச் சந்திக்கத் தவறுதல் என்பது நமக்குச் சாத்தியமாக இருப்பதால், இந்தக்கேள்விகளை நாம் சுலபமாக ஒதுக்கிவிட முடியாது என்றே நான் நம்புகிறேன். நாம் சரியான விஷயங்களைக் கூறி சரியான இயக்கங்களில் கடந்து செல்லும் நிலையிலும், இன்னமும் உண்மைத்தன்மையுள்ள கிறிஸ்தவர்களாக இராதிருக்கக் கூடும்.*

*நம்பகத்தன்மை பற்றிய கேள்வியானது நாம் ஒரு சபையாக நிலவியிருக்க அடிப்படையான விஷயமாக உள்ளது, ஏனென்றால் அது நம்மைப் பல் வேறு வழிகளில் எதிர்கொள்கிறது. உதாரணமாக, ஒரு சபைக்குழுமமானது காலமுறைப்படி “சபையின் நிலைப்பாடு” பற்றிக் கேட்கவும் நம்பகத் தன்மையுள்ள சபைக்கு என்ன நிகழ்வுகள் அவசியமானவை என்று தீர்மானிக் கவும் இடமுண்டு. நமது வரவுசெலவுத் திட்டங்கள் மற்றும் நமது கட்டிடங்கள் ஆகியவை நம்பகத்தன்மை பற்றிய நமது கண்ணோக்கைப் பிரதிபலிக்கும். ஊழியக்காரர்கள் மற்றும் பிற நடத்துனர்களை நாம் தேர்வுசெய்தல்கூட, நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவத்தைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலைப் பிரதிபலிக்கும். நமது சீர்தூக்குதலில் நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவர்களாக இருப்பவர்களை, நடத்துனர்களாக நாம் தேர்வுசெய்வோம். ஏறக்குறைய ஒவ்வொரு முடிவுமே முன்கேள்வி ஒன்றின் அடிப்படையில் அமைந்திருக்கும்: கிறிஸ்தவருக்கென்றுள்ள தனிப்பட்ட அடையாளம் என்ன?*

*நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றில் உண்மை நிலைக்குப் பின்னால், அதிகம் அடிப்படையான கேள்வி உள்ளது: நம்பகத்தன்மையுள்ள ஒரு சபையின் அடையாளம் என்ன? நமது சமூகத்தில் நாம், பதில்களில் குறைவுபடுவதில்லை. நேர்மாறான பதில்களினால் நாம் அடிக்கடி மூழ்கடிக்கப்பட்டுவிடுகிறோம் என்பதே பிரச்சனையாக உள்ளது. நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவம் என்பது வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு விஷயங்களை அர்த்தப்படுத்த வந்துள்ளது. இந்தக் கேள்வியின்மீது கருத்தொருமைப்பாட்டில் குறைவுபடுதலானது, உள்ளூர் சபைக்குழுமம் ஒன்று பேரழிவான விளைவுகளைப் பெறச்செய்யக்கூடும். தனிப்பட்ட தேவபக்தியான அனுபவமே நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது என்று சிலர் மனநிறைவு அடையலாம். உணர்வுகள் மற்றும் அடையாளங்கள் ஆகியவை தங்களது ஊழியத்தின் உண்மைத்தன்மையைச் செயல்விளக்கப்படுத்துகின்றன என்று சுட்டிக்காண்பிப்பவர்கள் மத்தியில் இந்தப் பதிலுரை கேட்கப்படுகிறது. காணக்கூடிய வெற்றியின் சோதனை என்பது இரண்டாவது பதிலாக இருந்துள்ளது. காணக்கூடிய விளைவுகள் பெரிதும் பாராட்டப்படக்கூடிய ஒரு கலாச்சாரத்தில், நமது சொந்தக் கிறிஸ்தவத்திற்கு நாம் அந்த சோதனையை சுலபமாக நடைமுறைப்படுத்த முடியும். சந்தையிடத்தின் தர அளவையை நமது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு நடைமுறைப்படுத்தும்படி நாம் சோதிக்கப்படுகிறோம். இந்தத் தர அளவை நடைமுறைப்படுத்தப்படும்போது, நம்பத்தன்மையின் அடையாளம், ஒரு பக்கத்தின்மீது எண்களின் ஒரு அமைவுக்குள்ளாகக் குறைக்கப்பட்டதாகி*

*விடுகிறது. உறுப்பினர்த்துவம் மற்றும் மொத்த உடமைகள் ஆகியவற்றில் மொத்த இலாபங்கள் மற்றும் நஷ்டங்களைப் பற்றிப் பதிவுசெய்யப்பட்ட எண்களை வாசிப்பதினால் ஒருவர், சபையின் வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிக்க முடியும். இந்தத் தர அளவை நடைமுறைப்படுத்தப்பட்டால், சபை நடத்துனர்கள் சபையானது சாத்தியமான வகையில் அதிகமான மக்களுக்குக் கவர்ச்சிகரமானதாக இருக்கச் செய்ய, சபைபற்றிய மனக்கருத்தை மேம்படுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளனர்.*

*மற்ற சந்தர்ப்பங்களில், நம்பகத்தன்மை பற்றிய சோதனையானது, சமூக பொருளாதார அடக்கு முறையிலிருந்து விடுவித்தலில் சபையின் ஈடுபாடு பற்றிய கேள்விகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சோதனையானது சபையின் முக்கிய இடத்தைப் பற்றிக்கொண்டுள்ள குறிப்பிட்ட போதனைகள் மற்றும் ஆய்வுக்கருத்துக்கள் ஆகியவற்றில் முதன்மையாக இருக்க வேண்டும் என்று மற்றவர்கள் கூறியுள்ளனர். ஆகையால் கிறிஸ்தவரின் அடையாளம்பற்றிப் பல் வேறு வகையான கூற்றுகள் கேட்கப்பட்டிருக்கின்றன.*

*இந்தக் கேள்வியானது, ஊழியத்திற்கென்று ஒரு சபைக்குழுமத்தை ஆயத்தப்படுத்தும் பணிப்பொறுப்பைக் கொண்டுள்ள ஊழியக்காரர்களை விசேஷமாகக் கவலைக்கு உட்படுத்தியுள்ளது. ஊழியம் பற்றிய நேர்மாறான பல கண்ணோட்டங்களின் காரணமாக, முழுநேர ஊழியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்கள் ஊழியத்திற்கு ஏற்புடைய மாதிரிகளைக் கண்டறிவதில் அடையாள இடர்ப்பாட்டினால் துன்புறுதலுக்கு உள்ளாகின்றனர். பல சந்தர்ப்பங்களில், ஊழியக்காரரின் நடவடிக்கைக்கான மாதிரியானது சபைக்கு வெளியிலிருந்து தரவழைக்கப்படுகிறது. ஊழியக்காரர், திறன் மற்றும் வளர்ச்சியை அதிகப் படுத்துவதில் சகோதரக் கூட்டுறவின் தர அளவைக்குத் தக்கவாறு இருக்கும்படி சிலர் எதிர்பார்த்துள்ளனர். மற்றவர்கள், அவரது மாதிரியை தொழில்சார் ஆலோசகரில் கண்டுள்ளனர். இந்த "அடையாள இடர்பாடு" என்பது ஊழியருக்கு மாத்திரமல்ல, ஆனால் முழு சபைக்குமே பிரச்சனையாக உள்ளது. பின்வரும் அடிப்படைக் கேள்வியைக் கேட்கத் திரும்ப வேண்டிய அளவுக்கு நாம், கிறிஸ்தவ நடத்துவத்துவம் மற்றும் சபை நிகழ்வுகள் ஆகியவற்றிற்கு மிக அதிகமான மாற்றுக் கருத்துருக்களைக் கண்டிருக்கிறோம்: ஒரு கிறிஸ்தவரின் அடையாளம் என்ன?*

## புதிய ஏற்பாட்டைத் தற்செயலாகக் கேள்விப்படுதல்

*நமது கேள்விகள், ஏற்கனவே முதல் நூற்றாண்டில் கேட்கப்பட்டிருந்தன என்பது புதிய ஏற்பாட்டின் தொடர்ந்திருக்கும் வல்லமைக்கு ஒரு காரண மாக உள்ளது. நமது சொந்தக்கேள்விகள் போன்ற கேள்விகளினிமித்தமாகவே நிருபங்கள் எழுதப்பட்டன. நம்பகத்தன்மையான ஊழியம் எது என்று கண்டறிய நாம் நோக்கம் கொண்டிருந்தால், பவுலுக்கும் கொரிந்தியர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை "தற்செயலாகக் கேள்விப்படுவதன்" மூலம் நாம் பயனடைவோம். கொரிந்து சபை தோற்றுவிக்கப்பட்டதில் தொடங்கி (இ.வ. நடபடிகள் 18:1-17), ஒரு இடர்ப்பாட்டில் இருந்து இன்னொரு இடர்ப்பாட்டிற்குக் கடந்து சென்ற அந்த சபைக்குழுமத்துடன் பவுல் ஒரு தீவிரமான தொடர்பைக் கொண்டிருந்தார். இந்த இடர்ப்பாடுகள் 1 கொரிந் தியர் நிருபத்தை எழுதியதில்கூட தீர்த்துவைக்கப்படவில்லை. பவுல் 1 கொரிந்*

*தியர் நிருபத்தை எழுதியவுடன், புதிய பிரச்சனைகளின் முழு அமைவு ஒன்று எழும்பிற்று. 1 கொரிந்தியர் நிருபத்தைக் கொண்டுசென்று சேர்த்த தீமோத்தேயு, புதிய கேள்விகள் இருந்தன என்று கூறுவதற்காகப் பவுலிடத்தில் திரும்பி வந்தார் என்பது உறுதி.*

*கொரிந்தியர்கள் எதிர்கொண்டிருந்த புதிய பிரச்சனைகள் 10:1-11ல் உரைக்கப்பட்டுள்ளன. உடனடியாகப் பவுல், தாக்குதலின்கீழான ஒரு மனிதரைப்போல் எழுதுகிறார் என்பதை உடனடியாக நாம் கவனிக்கிறோம். 10:1, 2 வசனங்கள், பவுல் விமர்சிக்கப்பட்டிருந்தார் என்பதைக் காண்பிக்கின்றன. 10:1ல் நாம் அனேகமாக, சுடுசொல் துணுக்கு ஒன்றைக் கவனிக்கலாம், ஏனெனில் பவுல் அனேகமாக இங்கு தமக்கெதிராகக் கற்பிதம் செய்யப்பட்ட பொதுவான விமர்சனங்களையே குறிப்பிடுகிறார் எனலாம். 10:2ன்படி, பவுல் "மாம்சத்தின்படி நடக்கிறவர்" (kata sarka, "மாம்சத்தின்படி") என்று "சிலர்" கூறுகின்றனர். இந்தப் பிரச்சனை 10:7ல் அதிகம் வலிவுநிறைந்த வகையில் உரைக்கப்படுகிறது, அங்கு பவுல், "ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குரியவனென்று நம்பினால், தான் கிறிஸ்துவுக்குரியவனாயிருக்கிறதுபோல நாங்களும் கிறிஸ்துவுக்குரியவர்களென்று அவன் தன்னிலேதானே சிந்திக்கக்கடவன்" என்று கூறுகிறார். கிறிஸ்துவுக்குரியவன் என்ற வார்த்தையானது "கிறிஸ்தவர்" என்று தரவழைக்கப்பட முடியும். 2 கொரிந்தியர் நிருபத்தில் இடர்ப்பாடான நிலையில் உள்ள பிரச்சனை பின்வருமாறு: ஒரு கிறிஸ்தவரின் அடையாளம் என்ன? பவுல், தாக்குதலுக்கு உட்பட்டவராகி, கிறிஸ்தவர் என்ற வகையில் தமது ஆதாரச் சான்றுகளைத் தர வேண்டியவராக இருந்தார். இதுவே 2 கொரிந்தியர் நிருபத்தின் மையப்பிரச்சனையாக உள்ளது.*

*2 கொரிந்தியர் நிருபம் முழுவதிலும், பவுல் தற்காப்புவாதத்தின் பக்கம் இருப்பதாகக் காணப்படுகிறார். அவரது கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றிக் கேள்விஎழுப்பியவர்கள், 1 கொரிந்தியர் நிருபம் எழுதப்பட்ட பின்னரே கொரிந்து நகருக்கு வந்திருப்பார்கள் என்பது உறுதி. அவர்கள் பரிந்துரைக்கான தங்கள் சொந்தக் கடிதங்களுடன் வந்தனர் (3:1), மற்றும் அவர்கள் அப்போஸ்தலர்கள் என்றும் "நீதியின் ஊழியக்காரர்கள்" என்றும் உரிமை கோரினர் (11:13, 15). அதே வேளையில் அவர்கள் தங்களை பவுலுடன் ஒப்பிட்டு, அவர் ஒரு உண்மையான "கிறிஸ்துவின் ஊழியக்காரர்" அல்ல என்ற முடிவுக்கு வந்தனர் (11:23). அவர்கள், பிற ஊழியக்காரர்களுடன் தங்களை ஒப்பிடுவதிலும் தங்களின் வல்லமைகளை மற்ற "ஊழியக்காரர்களின் வல்லமைகளுடன்" ஒப்பிடுவதிலும் மகிழ்ச்சி அடைந்தனர் என்பதற்கு இப்புத்தகம் முழுவதிலும் அடையாளங்கள் உள்ளன (இ.வ. 3:1; 10:12, 18). ஆகையால் பவுல் ஒரு இக்கட்டுமிக்க சூழ்நிலையில் இருந்தார், மற்ற ஊழியக்காரர்களுடன் "தன்னை அடையாளப்படுத்துதல் அல்லது ஒப்பிடுதல்" என்பது அவரது தெரிவாக இருப்பதில்லை (10:12). இருப்பினும், சபையினிமித்தமாக, அவர் தாம் ஒரு நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவராக இருப்பதை அறிவித்தாக வேண்டும். 10:7ல் அவரது உரிமைகோருதலானது, 11:23ல் "அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? ... நான் அதிகம் ..." என்ற அவரது உறுதிப்பாடு போன்றதாகவே உள்ளது.*

*தாம் ஒரு "உண்மையான கிறிஸ்தவராக" இருக்கிறார் என்ற பவுலின் உரிமைகோருதல், குறிப்பிட்ட உபதேசமல்ல ஆனால் ஊழியரின் நடக்கையும் வாழ்வுநடையுமே, அடிக்கடி பிரதான விஷயமாக உள்ளது என்பதற்கான*

ஒரு நினைவூட்டுதலாக நமக்கு உள்ளது. அவரது எதிராளிகள் அவரது உறுதிப்பாடுகள் பற்றிக் கேள்வியெழுப்பவில்லை; கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்ற வகையில் அவரது செயல்பாடுகள் பற்றியே அவர்கள் கேள்வியெழுப்பினர். ஒத்தவாக்கியங்களைச் சுருக்கமாகக் கண்ணோக்குதலானது, 2 கொரிந்தியர் நிருபத்தில் ஊழியத்தின் ஆய்வுக்கருத்து எவ்வளவு முக்கியமானதாக உள்ளது என்பதை விவரிக்கிறது. "ஊழியர்" (*diakonos*) மற்றும் "ஊழியம்" (*diakonia)* என்ற வார்த்தைகள், இதைத்தவிர வேறு வார்த்தைகளை ஆங்கில மொழிபெயர்ப்புகள் பயன்படுத்தினாலும் பவுலின் மற்ற நிருபங்கள் எல்லாவற்றிலும் வருவதைக்காட்டிலும், 2 கொரிந்தியர் நிருபத்தில் மிகவும் அடிக்கடி வருகின்றன. *Diakonia* என்பது பதினொரு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (இ.வ. 3:7-9; 4:1; 5:18; 6:3; 8:4; 11:8) அதேவேளையில் *diakonos* என்பது நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (3:6; 6:4; 11:5, 23). இவ்வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுதலானது, நம்பகத்தன்மை வாய்ந்த கிறிஸ்தவம் என்பதே 2 கொரிந்தியர் நிருபத்தின் ஆய்வுக்கருத்தாக உள்ளது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பவுல் தமது ஊழியத்தைத் தாக்குதலில் இருந்து தற்காத்துக்கொள்ள, இந்த நிருபத்தை எழுதினார்.

## ஒரு கிறிஸ்தவரின் அடையாளம்

கிறிஸ்துவினுடைய சட்டப்பூர்வமான ஊழியக்காரருடைய அடையாளம் என்னவாக உள்ளது? பவுலுடன் சேர்ந்து நாம், எந்த அடிப்படையில் "கிறிஸ்துவினுடையவர்கள்" (10:7) என்று உரிமைகோருகிறோம்? 10:1-11ல் பவுலுக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து, பவுலை விமர்சித்தவர்கள் சுமத்திய "சோதனையை" நாம் உய்த்துணர முடியும்: "அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்; சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே" (10:10). பவுல் மனதில் பதியும்படி பேசக்கூடிய ஒரு பேச்சாளராக இருக்கவில்லை. சொல்லப்போனால், விமர்சனமானது, "அவரது பேச்சு விரோத உணர்வை எழுப்புகிறது" என்பது நேரடிச் சொல்விளக்கமாயிருந்தது. தொடர்ந்து உடல்நலம் குன்றியிருந்தவர் என்ற வகையில் (12:7), அவரது "உடல் தோற்றம்" பலவீனமாக இருந்தது. அவரது "தாழ்மை" (10:1), அவர் தைரியமும் தமது ஊழியத்தில் "உற்சாகமும்" இல்லாதிருந்தார் என்ற மனப்பதிவைக் கொடுத்தது. இந்த விமர்சனங்கள், பவுல் "உலகப்பிரகாரமான வழியில்" (நேரடி அர்த்தத்தில், "மாம்சப்பிரகாரமாக") செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டுடன் மேலும் குற்றச்சாட்டுகளைக் கூட்டின. எதிராளிகள், "பவுல் ஒரு உண்மையான கிறிஸ்தவராக இருந்தால், வல்லமையின் அடையாளம் ஏதாவது இருக்கும், இசைவிணக்கமான உரையாற்றுதலின் வெளிப்பாடு ஏதாவது இருக்கும், அல்லது வெற்றியின் பதிவேடு ஏதாவது இருக்கும்" என்று கூறியதாகத் தோன்றிற்று. மனதை ஈர்க்காத பவுலின் வெளிக்காண்பித்தல், அவர் ஒரு கிறிஸ்தவருமல்ல (10:7), அவர் கிறிஸ்துவின் ஊழியக்காரருமல்ல (11:23) என்று கருத்து தெரிவித்தது.

கிறிஸ்தவரின் அடையாளம் என்பது வல்லமையின் காணக்கூடிய வெளிப்பாடுகளில் இருந்து வரவேண்டும் என்று எதிராளிகள் கூறினர். மனதை ஈர்க்காத வெளிக்காண்பித்தல் என்பது, அவர்களைப் பொறுத்தமட்டில், அவர் ஆவியானவருடைய வல்லமையில் குறைவுபட்டிருக்கிறார் என்பதற்கான ஒரு

அடையாளமாக உள்ளது. பவுல் தமது ஊழியத்தை “உலகப் பிரகாரமான” வகையில் நடத்துகிறார் என்று குற்றம்சாட்டியபோது, உண்மையில் அவர்கள், அவர் ஆவியில் குறைவுபட்டிருந்தார் என்றே குற்றம் சாட்டினர். சாதாரண மாக, “உலகப் பிரகாரமான” (*kata sarka*) என்ற சொற்றொடர், “ஆவியின்படி” (*kata pneuma,* ரோமர் 8:4, 5) என்ற சொற்றொடரின் எதிர்ச்சொல்லாக உள்ளது. பவுல், தமது “பலவீனமான” உடல்தோற்றம் மற்றும் பேச்சு ஆகியவற்றுடன், நம்பகத்தன்மைக்கான அவர்களின் தேர்வில் தோல்வியடைந்திருந்தார்.

அவர்களின் குற்றச்சாட்டுகளுக்குப் பவுல் பதில் அளிக்கும்போது, அவரது சுடுசொல் குறிப்புகள் சிலவற்றை நாம் உணரக்கூடும்: “உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்” (10:1). “தாழ்மை மற்றும் சாந்தம்” ஆகியவை பவுலுக்கு வெட்கக்கேடானவையாக இருப்ப தில்லை. உலகத்தர அளவையின்படி, “தாழ்மை மற்றும் சாந்தம்” ஆகியவை ஏளனத் திற்கு உரியவையாக இருந்தன. இந்தச் சொற்றொடர்கள், அடங்கிப்போகிற மற்றும் சிறுமையான நிலைப்பாட்டைக் கருத்துத் தெரிவித்தன. ஆனால் உலகம் எதைப் பலவீனமானது என்று நினைத்ததோ, அதுவே பவுலுக்கு, கிறிஸ்தவரின் அடையாளமாக, கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தலுக்கு ஏற்புடைய நடக்கையாக இருந்தன. அவரது எதிராளிகள் பார்வையில் அவரைத் தகுதியற்றவராக்கிய பண்புகளே அவரால், தாம் கிறிஸ்துவினுடையவராக இருப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாளமாக இருந்தது (10:7). அவர் தமது வாசகர்களிடம், “கிறிஸ்துவின் தாழ்மை மற்றும் சாந்தம்” ஆகியவற்றினிமித்த மாக வேண்டுகோள் விடுத்தார். பவுலினுடைய ஊழியத்திற்குக் கிறிஸ்துதாமே மாதிரியாக இருந்தார்.

## இடையில் அகப்பட்ட ஒரு சபை

பவுலும் அவரது எதிராளிகளும் தங்களைத் தாங்களே, நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவர்கள் என்று மேன்மைபாராட்டிக் கொள்வதைக் கவனித்த கொரிந்தியர்களுடன் நாமும் சேர்ந்து பரிதாபப்பட முடியும் (5:12; 6:4). அவ்விருசாராரும், அளவையின் மாறுபட்ட தராதரங்களை அளிக்கையிலேயே, தாங்கள்தாம் கிறிஸ்துவின் சட்டப்பூர்வமான ஊழியக்காரர்கள் என்பதற்கான நம்பகச் சான்றிதழ்களை அளித்ததாக உரிமைகோரினர். நம்பகத்தன்மையுள்ள ஊழியம் ஒன்றைத் தேர்ந்து எடுப்பதினால், சபையானது என்ன வகையான சபை என்று தீர்மானிக்க அழைக்கப்பட்டது. கொரிந்தியர்கள், பவுலின் எதிராளிகளுடையதல்ல ஆனால் பவுலினுடைய வார்த்தைகளைப் பாதுகாத்து வைத்தனர் என்றிருப்பதால், அவர்கள் சரியான முடிவை மேற்கொண்டனர் என்று நாம் யூகிக்கிறோம்.

இந்த நிருபத்தை தொடக்கத்தில் வாசித்த சபையின் சூழ்நிலையானது, இன்றைய நாட்களில் உள்ள ஒவ்வொரு சபைக்குழுமத்தின் சூழ்நிலையில் இருந்து மிகவும் மாறுபட்டிருக்கவில்லை. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் நாம் ஒருக்காலும் சிந்தித்தே இராத சில நிகழ்ச்சிகளுக்கு, இன்றைய நாட்களில் சாத்தியக்கூறுகளை நாம் காண்கிறோம். நாம் எவ்வகையான சபையாராக இருக்க வேண்டும் என்று முடிவுசெய்யும்படி நம்மைக் கட்டாயப் படுத்துகிற

மாற்றுவழிகளுக்கு முன்பாக நாம் நிற்கிறோம். இந்த வாய்ப்புகளினிமித்த மாக, 2 கொரிந்தியர் நிருபத்தின் பின்னணியில் உள்ள அதேகேள்விகளை நாம் பகிர்ந்து கொள்வதாகக் காண்பதற்கு நல்ல காரணம் ஒன்றுள்ளது. நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவருக்கான ஆதாரச் சான்றுகளாக 2 கொரிந்தி யர் நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள், இன்றைய நாட்களிலும் கிறிஸ்துவின் ஊழியக்காரருக்கு அடையாளங்களாக உள்ளன. பவுல் தம்மை ஆராய்ச்சி செய்தவர்களுக்கு அறைகூவல் விடுத்தார்: "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்" (13:5).

## 2 கொரிந்தியர் நிருபத்தை வாசித்தல் பற்றி

2 கொரிந்தியர் நிருபத்தை வாசிப்பவர், நடைமுறையில் அந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் நம்பத்தன்மையுள்ள கிறிஸ்தவம் என்ற பாடக்கருத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ளது என்பதை உணர்ந்தறியத் தவறுதல் கடினமாகும். பவுலின் தொனியும் கவனக்குவிப்பும், சிலவேளைகளில் முற்றிலும் மாறுவதாகக் காணப்படுகிறது. இந்த நிருபத்தின் சிலபகுதிகள், கொரிந்தியர்கள் தங்களுடைய முந்திய அறைகூவல்களில் இருந்து மனந்திரும்பிப் பவுலின் ஊழியத்திற்குப் பதில் செயல் செய்திருந்தனர் என்ற நற்செய்தியைத் தீத்து கொண்டுவந்திருந்ததால் பவுல் ஆவியில் உற்சாகமுள்ளவரானார் என்று கருத்துத் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதிகளில், கொரிந்தியர்களின் பிரச்சனைகளினால் துன்பப்பட்டிருந்த (2:12, 13) பவுலின் மனம், இப்போது இளைப்பாறுதல் அடைந்துள்ளது என்ற மனப்பதிவை நாம் பெறுகிறோம். இருப்பினும் 10ல் இருந்து 13வரையுள்ள அதிகாரங்களில், பவுலின் ஊழியம் தீவிரமான தாக்குதலின்கீழ் இருந்தது என்பதை அவரது தொனி தெரிவிக்கிறது. அவர், தாம் தோற்றுவித்திருந்த/நிலைநாட்டியிருந்த சபைக்கு, தாம் ஒரு உண்மைக் கிறிஸ்தவர் என்று செயல்விளக்கப்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது (10:7; 11:23)! சபைக்கு மூன்றாம் முறை செல்லத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில், அங்கு தமக்கு எவ்வகையான வரவேற்பு இருக்கும் என்பதில் அவர் நிச்சயமற்றவராக இருக்கிறார். அவர் கொரிந்து நகருக்குத் தாம் இரண்டாம்முறை சென்றபோது எதிர்கொண்டிருந்தது போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்குமோ என்று அஞ்சுகிறார் (இ.வ. 2:1-4). இந்த அதிகாரங்கள், பிரச்சனைகள் தீரவில்லை என்பதை முற்றிலும் மாறாக சுட்டிக்காண்பிக்கின்றன. சபைவாழ்வு அலைக்கழிப்பு உள்ளதாகவே நிலைத்துள்ளது!

2 கொரிந்தியர் நிருபத்தின் மற்ற பகுதிகள், கலந்துரையாடலின் ஓட்டத்தில் குறுக்கிடுவதாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, 6:14-7:1 என்பது, "அவிசுவாசிகளுடன் ஒன்றாக இணைந்திருத்தலுக்கு" எதிராகக் கிறிஸ்தவர்களை எச்சரிக்கும் ஒரு பகுதியாக உள்ளது, இது 6:13 மற்றும் 7:2 ஆகியவற்றின் சிந்தனைகளில் குறுக்கிடுவதாகக் காணப்படுகிறது. இத்துடன் கூடுதலாக, பணம் சேகரித்தல் என்பதில் பங்கேற்றலின் அவசியத்தின்மீது இரு தனித்தனிப் பாடங்கள் இப்புத்தகத்தில் இருப்பதாகக் காணப்படுகிறது (அதிகாரங்கள் 8 மற்றும் 9). இரண்டாவது பாடம் 9:1ல் தொடங்குகிறது: "பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய தர்மசகாயத்தைக்குறித்து, நான் அதிகமாக உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை ... ."

*இந்த நிருபத்தின் கருத்தோட்டத்தில் இடைமறித்தல்களாகக் காணப்படும் விஷயங்கள் பற்றிச் சுலபமாக விளக்க எதுவும் இருப்பதில்லை. ஒரே புத்தகத்தில், சில சமயம் பிரச்சனை தீர்ந்துள்ளதாகவும் (அதிகாரம் 7) மற்ற சமயங்களில் பிரச்சனை தீராதநிலையில் இருப்பதாகவும் (அதிகாரங்கள் 10முதல் 13வரை) காணப்படுவது ஏன் என்பதுபற்றிக் கல்வியாளர்கள் வாதம் செய்துள்ளனர். இந்த இடைமறித்தல்கள், இந்த நிருபம் ஒரே அமர்வில் எழுதப்படவில்லை என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. ஒருவேளை, கொரிந்து நகரில் சூழ்நிலை பலமுறைகள் மாறியிருக்கலாம். பவுலின் மாறும் மனநிலை அந்த சபையின் மாறும் சூழ்நிலையைப் பிரதிபலித்திருக்கலாம்.*

*நிருபத்திற்குள்ளாக இருக்கும் இந்த மாற்றங்கள், நமக்கு சபையின் வாழ்வு என்பது கொரிந்து சபையின் அனுபவங்கள் போலின்றி இருப்பதில்லை என்பதை நமக்கு நினைவூட்டக்கூடும். எல்லாப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்ட வேளை என்பது அரிதானதாகவே உள்ளது, ஏனெனில் பழைய பிரச்சனைகள் உள்ள இடத்தில் புதிய பிரச்சனைகள் வந்துவிடுகின்றன. பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்பட்டிருப்பதாகக் காணப்படும் ஓய்வுவேளைகள் உள்ளன, ஆனால் அவைகள் சபையின் வரலாற்றில் கடந்துசெல்லும் கணங்கள் என்பதைவிட அதி கமானதாக இருப்பதில்லை. கொரிந்தியருக்கு எழுதிய நிருபங்கள், சபையின் வாழ்வு எப்போதுமே நெருக்கத்தின் கணங்களால் நிரப்பப்பட்டுள்ளது என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன.*

## முடிவுரை

*உண்மைக் கிறிஸ்தவரின் அடையாளம் என்ன? ''பணிவிடை கொள்ளுதற்கல்ல, ஆனால் பணிவிடை செய்யவே வந்த" ஒருவரின் ஊழியத்தைச் செயல்படுத்துவதில் சபையின் திட்டங்கள் என்னவாக உள்ளன? கொரிந்தியர்கள் அந்த முடிவுடன் எதிர்கொள்ளப்பட்டனர்.*

*பல்வேறு விருப்ப தேர்வுகளை எதிர்கொண்ட நிலையில், தற்காலத்திய சபையானது தனது செயல்களுக்குத் திட்டம் இடுகிறது. அந்த காரணத்தினால், 2 கொரிந்தியர் நிருபம், நாம் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது.*